2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினா எண் 65, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

65—

சிறுபாசன ஏரி

***11490—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி :**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி ஒன்றியம், கம்மாளப்பட்டி ஊராட்சி, மல்லிமுடக்கு பகுதியில் புதியதாக சிறுபாசன ஏரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்குண்டான விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிமுடக்குப் பகுதியை ஒட்டி மிக உயர்ந்த போதமலை என்ற ஒரு மலை உள்ளது. மழை பெய்யும்போது திரண்டுவரும் தண்ணீர் மலையிலிருந்து கீழ் நோக்கி வரும்போது, அந்தப் பகுதியிலுள்ள சாகுபடி நிலங்கள் வழியாகச் செல்லும்போது அங்குள்ள விளைச்சல் பொருள்களை அழித்தும், நிலத்தினை அறுத்துக்கொண்டும் செல்கிறது. அப்பகுதியில் வாழும் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அப்பகுதியில் வாழும் மக்களில் 90*

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2002 ஏப்ரல் 3]

சதவீதம் பேர், மலைவாழ் மக்கள்தான் அங்கே வாழ்கிறார்கள். மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்திற்காக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். அதனால், மலைவாழ் மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு 200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறத்தக்க வகையில் இதனைக் கனிவோடு பரிசீலித்து மல்லிமுடக்கு சிறு பாசன ஏரி அமைக்கும் திட்டத்திற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியம், கம்மாளப்பட்டி ஊராட்சியில் மல்லிமுடக்குப் பகுதியில் சிறு பாசன ஏரி அமைக்க, இடத்தைத் தல அலுவலர்கள் ஆய்வு செய்தனர். இவ்விடமானது திருமனூர் பாதுகாக்கப்பட்ட வன நிலத்தில் அமைகிறது. அந்த இடத்தில் நீர் வரத்தும் குறைவாக உள்ளது. ஏரி கோரும் இடமும் நீர் பிடிப்பிற்கு ஏற்ற இடமாக இல்லை. எனவே, சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஊராட்சி, கம்மாளப்பட்டி கிராமம், மல்லிமுடக்கு என்ற இடத்தில் ஏரி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து, நீரைச் சேமிக்கின்ற வகையிலே பல்வேறு திட்டங்களை இந்த நாட்டிற்கு அளித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, இந்த நிதியாண்டிலே இதுபோன்ற நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து சிறு ஏரிகள், குளங்கள் எங்கெங்கே அமைக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எங்கு அமைக்கப்பட வேண்டுமென்பதனைப் பற்றி தனியாக வினா கொடுத்தால், அதற்கு விடையளிக்கத் தயாராக இருக்கின்றேன்.